මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# <u>கேள்விப்பத்திர அறிவித்தல்</u>

## மக்கள் வங்கியின் பீப்பல்ஸ் டவர் கட்டிடத்திற்கும் பழைய தலைமை அலுவலக கட்டிடத்திற்கும் குடிநீர் போத்தல்களைக் கொள்வனவு செய்தல். (2026 - 2028 ஆகிய 2 வருடங்களுக்காக)

---------------------------------------------------------------------

மக்கள் வங்கியினால் கீழே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

| **கேள்விப்பத்திர இலக்கம்** | **இடம்** | **பொருள் பற்றிய விபரம்** | **விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியின் பெறுமதி** | **விண்ணப்பப் படிவம் வழங்கப்படும் இறுதி திகதி** | **கேள்விப்பத்திரம் மூடப்படும் திகதி** |
|---|---|---|---|---|---|
| P-164/2026 | பீப்பல்ஸ் டவர் கட்டிடம் | லீட்டர் 19 குடிநீர் போத்தல் 10,000<br><br>Water Dispensers - 50<br><br>மில்லி லீட்டர் 500 குடிநீர் போத்தல் 1000 | மொத்த வருடாந்த மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 3% (ரூ.மில்.5.0இற்கு மேற்படுமாக இருந்தால்) | 2026.06.23ஆம் திகதி பி.ப.2.00 மணி | 2026.06.24ஆம் திகதி பி.ப.2.00 மணி |
| P-165/2026 | பழைய தலைமை அலுவலக கட்டிடம் | லீட்டர் 19 குடிநீர் போத்தல் 10,000<br><br>Water Dispensers - 60<br><br>மில்லி லீட்டர் 500 குடிநீர் போத்தல் 1000 | மொத்த வருடாந்த மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 3% (ரூ.மில்.5.0இற்கு மேற்படுமாக இருந்தால்) | 2026.06.23ஆம் திகதி பி.ப.2.00 மணி | 2026.06.24ஆம் திகதி பி.ப.2.00 மணி |

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை **2026.06.04ஆம் திகதி முதல் 2026.06.23ஆம் திகதி வரை** வங்கி வேலை நாட்களில் **மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை** இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக ஒரு கேள்விப்பத்திரத்திற்காக மீளச் செலுத்தப்படாத **ரூ. 5,000/-** கேள்விப்பத்திர வைப்புத் தொகையுடன் குறித்த நிறுவனத்தின் விண்ணப்ப கடிதமொன்றையும் மக்கள் வங்கி வழங்கல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. தகுந்தவாறு தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியைக் கொண்ட விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியொன்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து (மக்கள் வங்கியைத் தவிர்த்து) பெற்று சமர்ப்பிக்க வேண்டும். அது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருக்க வேண்டும். இதற்காக 180 நாட்களுக்குச் செல்லுபடியான வங்கி கொடுப்பனவு கட்டளைகளை அல்லது வங்கி வரைவுகளைச் சமர்ப்பிக்க முடியும். தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மக்கள் வங்கியில் எந்தவொரு விதத்திலான கணக்கொன்றில் பண வடிவில் உள்ள வைப்புத் தொகை மற்றும் அதற்கு உரியதாக எதிரீடு செய்யும் கடிதமாக இருந்தாலும் பிணைப்பொறுப்பு முறியாக ஏற்றுக்கொள்ள முடியும்.

3. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை மக்கள் வங்கி, இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் வழங்கல் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். மேலே தரப்பட்டுள்ள திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்பத்திரம் மூடப்படும். அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே மீள ஒப்படைக்கப்படும்.

4. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும் எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு. ஆகக் குறைந்த விலைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு வங்கி கட்டுப்பட்டிருக்கவில்லை.

5. இது தொடர்பாக ஏதேனும் தகவல் அல்லது விளக்கம் தேவைப்பட்டால் 3740715 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முகாமையாளர் (பராமரிப்பு பொறியியலாளர் திணைக்களம்) அவர்களுடன் தொடர்புகொள்ளும்படி கேள்விப்பத்திரகாரர்கள் அனைவரிடமும் தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முகாமையாளர் (வழங்கல்)**
**வழங்கல் திணைக்களம்,**
**மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களம்**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் : 2439577/8**
**தொலைநகல் இலக்கம் : 2439576**
**இணையத்தளம் :** www.peoplesbank.lk
**மின்னஞ்சல் :** supplies@peoplesbank.lk